முருகப்பெருமான் துணை

**மகான் கோரக்கர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.10.2022**, திங்கட்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா
அறம் காக்கவந்த தேசிகா
மாறுதலை செய்த மக்களை
மகத்துவம்பெற அருளும் குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சுபகிருது துலைதிங்கள்
வரமென முன்னான்கீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 14 ம் நாள் 31.10.2022, திங்கட்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை கோரக்கர் யானும்
அருளும் உலகம் நலம்பெற
வாசிவென்ற வண்ணம் மக்களை
வல்லமையுள்ளவர்களாக மாற்ற
4. மாற்றவே அவதாரம் எடுத்து
மார்க்கமென சன்மார்க்க ஞான
ஆற்றலை ஆன்மீகமாக விதைத்து
அற்புதம் புரிகின்ற அரங்கன்
5. அரங்கன் திருவடி பற்றி வர
அவரவர்க்கும் புதுமை கிட்டி
வரங்களென வளர்ச்சி கூடும்
வந்தடையும் தெளிவு தயையும் தானாய்
6. தானாக அரங்கன் குருவருளால்
தவ சக்தியாக நிலை உயரும்
தான தருமம் செய்கின்ற வண்ணம்
தனவளம் பொருள் வளம் சிறந்து
7. சிறந்துமே அரங்கன் காட்டிய
சிறப்பான தரும வழிகளை
பரந்த உலகம் எங்கிலுமே
பரோபகாரமாக விதைக்கும் சக்தி
8. சக்தி பெருகி உலக மக்கள்
சாற்றிடுவேன் தரும பலத்தின்
சக்திபட தருமவான்களாவர்
சரவணச் சுடரேற்றி வணங்குவதால்
9. ஆதலால் ஞானிகளாக மாற்றம்
அடைந்து பேருலகையே காக்கும்
மேதகு பதவிகள் மேல்நிலை கண்டு
மேலவர்களாக செயல்கள் புரிவர்

10. புரியவே ஞானவான் நிரம்பிய
புண்ணியம் காக்கும் வண்ணம்
பெருமைமிக்க தலைமைகள் தனை
பேருலகம் எங்கும் படைத்து

11. படைத்துமே ஞான ஆட்சிதனை
பழுதில்லா உருவாக்கி இனிதே
தடையின்றி ஆறுமுகன் ஆசிபட
தரணியையே ஞான உலகமாக்குவர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–